## திராவிட இயக்க இதழ்கள் – ‘நம்நாடு பேசுகிறது’



1950-கள் முதல் 70-கள் வரை கழகத்தின் அதிகாரப்பூர்வ ஏடாக ‘நம்நாடு’ நாளிதழ் இருந்தது. அதன் தொடர்ச்சியாக 1980-களில் ‘நம்நாடு பேசுகிறது’ எனும் பெயரில், மாத இதழ் ஒன்று வெளிவந்துள்ளது.

இதன் ஆசிரியராக திராவிட இயக்க வரலாற்றாசிரியர் க.திருநாவுக்கரசு இருந்தார். இது சென்னையிலிருந்த ‘நம்நாடு’ அச்சகத்தில் இருந்து அச்சாகி வெளிவந்தது.

படத்தில் உள்ள இதழில், ‘பெரியார் நூலக வாசகர் வட்டம்’ தொடர்பாக நடத்தப்பட்ட கூட்டத்தின் பேசுபொருள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஈரோடு குறளாய்வு நிகழ்வு பற்றிய செய்தி, ‘ஆரியம்தான் மாயை, திராவிடமல்ல’ என்ற மறுப்புரை ஆகியவை வெளியிடப்பட்டுள்ளன.

படத்தில் உள்ள இதழின் முகப்புப் பக்கத்தில் ‘தமிழ் விடு தூது’ எனும் பழந்தமிழ் நூலில் இருந்து

‘வீரியஞ் செய்து வினையொழிய வேராச
காரியஞ் செய்யுங் கவிதையே – பாரில்
அரியா சனமுனக்கே யான லுனக்குச்
சரியாரு முண்டோ தமிழே – விரிவார்’

என்ற வரிகள் அச்சிடப்பட்டுள்ளன.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவரின் வாழ்த்துக் கடிதம்!



கம்பம் மு.கலைக்காமல்

3.12.1972 அன்று முன்னாள் அமைச்சர் ரகுமான்கான் அவர்களது இணையேற்பு விழா முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில், நடைபெறுவதாக இருந்தது. எம்.ஜி.ஆர் பிரச்சினை செய்து கொண்டிருந்த காலகட்டம். இணையேற்பு நடைபெறவிருந்த நாளன்று திடீரென்று சட்டமன்றம் கூட்டப்பட்டது. இதனால், கலைஞர் அவர்கள் வரவியலாத நிலையில், அண்ணன் முரசொலி செல்வம் அவர்களிடம் தன்னுடைய வாழ்த்துக் கடிதத்தைக் கொடுத்து அனுப்பினார். அவருடன் என்.வி.என் செல்வம், வலம்புரி ஜான், வழக்கறிஞர் ஜின்னா, புலவர் கோவிந்தன் ஆகியோர் வந்திருந்தனர். மணம் முடிந்து அன்று மாலை எனது தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

**– கம்பம் மு.கலைக்காமல்,**
**மொழிப்போர் வீரர், கம்பம், தேனி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### கழகத்தின் உரம் எது?

1958-ஆம் ஆண்டு ஏப்ரல் 26 மற்றும் 27 தேதிகளில் கர்நாடக மாநில தி.மு.கழகத்தின் 2-வது மாநில மாநாட்டில், மாநாட்டின் திறப்பாளர் டி.வி.நாராயணசாமி உரையில், “தி.மு.கழகத்தின் வளர்ச்சிக்குக் காரணமான உரம் எது? என ஆற்றிய உரை வீரம் செறிந்ததாக இருந்தது. ஆசிரியர் வேலாயுதம், வண்ணை பாண்டியன், தாளமுத்து – நடராசன், மும்முனை போராட்டத்தில் உயிர் நீத்த நடராசன், கேசவன், சிண்டப்பா என்கிற மொய்தீன் பிச்சை ஆகியோரின் ரத்தமும், ஊனும் உடலும், அந்த மதிப்பிற்குரியவர்களின் உயிரும் கழகத்தின் வளர்ச்சிக்குக் காரணம்” என கண்ணீர் சாட்சியமாகச் சுட்டிக் காட்டினார்.

# மாநாடு

**ர.பிரகாசு** **34**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

## மலைத்துப்போன மலைக்கோட்டை!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஐந்தாவது மாநில மாநாடு 1975-ஆம் ஆண்டில் நடைபெற்ற நிலையில், மீண்டும் அடுத்த மாநாட்டிற்காக தொண்டர்கள் 15 ஆண்டுகள் காத்திருந்தனர். தொண்டர்களை விடவும் பேராவலோடு காத்திருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். ஆறாவது மாநில மாநாடு 1990-ஆம் ஆண்டு பிப்ரவரி 9, 10, 11 ஆகிய 3 நாட்கள் மலைக்கோட்டை மாநகராம் திருச்சியில் நடைபெற்றது.

மாநாடு ஏற்படுத்திய உற்சாகத்தை உடன்பிறப்புகளுக்குக் கடிதம் வாயிலாகக் கடத்திக்கொண்டே இருந்தார் கலைஞர். 1989-ஆம் ஆண்டு டிசம்பர் 31-இல் தொடங்கி, மாநாடு நடைபெற்ற நாள் வரை, முரசொலி வாயிலாக உடன்பிறப்புகளுக்கு, திருச்சி மாநாடு குறித்து கலைஞர் எழுதிய கடிதங்களின் எண்ணிக்கை 10. மாநாடு அறிவிப்பு, ஏற்பாடு, பேச்சாளர்கள், தீர்மானங்கள் என மாநாட்டின் ஒவ்வொரு நகர்வையும் உடன்பிறப்புகளுக்குக் கடிதம் வாயிலாகக் கடத்தினார் கலைஞர்.

**தமிழ்நாட்டு மக்களின் இடஒதுக்கீட்டு உரிமைகளுக்கு எதிராகவும் கக்கிய நஞ்சை ஆதாரங்களோடு குறிப்பிட்டுத் தமிழின துவேசிகளைத் தோலுரித்தார் கலைஞர்.**



தி.மு.கழக 6-வது மாநில மாநாட்டை கலைஞர் தலைமையில் பொதுச் செயலாளர் பேராசிரியர் திறந்து வைக்கிறார்.

திருச்சி, அண்ணா நகரில் எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி பந்தலில் து.ப.அழகு முத்து அரங்கில், மாநாடு நடைபெற்றது. முத்தமிழறிஞர் கலைஞர் தலைமை தாங்க, பேராசிரியர் மாநாட்டைத் திறந்து வைத்தார். முதல் நாளான 9-ஆம் தேதி இளைஞர் அணியின் முன்னெடுப்பில் மிகப்பிரமாண்ட பேரணி நடைபெற்றது. “திருச்சி மாநகரம் அதுவரை கண்டிராத மாபெரும் பேரணி, ஜன சமுத்திரம் என்று வர்ணித்தால், அது சற்றும் மிகையல்ல” என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடு பாராட்டியது.

திருச்சி என்.செல்வராஜ் வரவேற்புக் குழுத் தலைவராகவும், திருச்சி கே.என்.நேரு மற்றும் புதுக்கோட்டை பெரியண்ணன் ஆகியோர் மாநாட்டுச் செயலாளர்களாகவும் நியமிக்கப்பட்டனர். மாநாட்டுப் பொருளாளராக மலர்மன்னன், மாநாட்டு நிதிக்குழுத் தலைவராக கே.வி.ராமசாமி, தொண்டர் படைத் தலைவராக காட்டூர் மகாலிங்கம் ஆகியோர் நியமிக்கப் பட்டனர். 9-ஆம் தேதி அண்ணாவின் ‘சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்’ நாடகமும், 10-ஆம் தேதி முத்தமிழறிஞர் கலைஞர் ‘மணி மகுடம்’ நாடகமும் அரங்கேற்றம் செய்யப் பட்டன. மாநாட்டின் முதல் நாளில் கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம் நடத்தப்பட்டு தீர்மானங்கள் ஆராய்ந்து இறுதி செய்யப்பட்டன.

இரண்டாவது நாளில், இளைஞர் அணியின் சார்பில், சமதர்ம சமுதாய மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டின் கடைசிநாளில்தான் தென் ஆப்பிரிக்காவில் கறுப்பர் இன விடுதலைக்காகப் போராடிய நெல்சன் மண்டேலா 27 ஆண்டுகள் சிறைவாசத்திற்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டார். அவருடைய விடுதலையை வரவேற்று, கலைஞர் தன் கைப்பட ஒரு தீர்மானத்தை எழுதி முன்மொழிந்தார். மாநாட்டில் கூடியிருந்த இலட்சக்கணக்கான கழகத் தொண்டர்கள் எழுந்து நின்று கைத்தட்டி மண்டேலாவின் விடுதலையை வரவேற்றனர். கைத்தட்டல் ஒலியில் அரங்கம் அதிர்ந்தது.

மாநாட்டில், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் இடஒதுக்கீடு உரிமைகளை அழுத்தம் திருத்தமாக, வலியுறுத்திப் பேசினார் கலைஞர். மண்டல் கமிசன் பரிந்துரைகள் நடைமுறைப் படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார். ஆனால், இது ‘பார்ப்பன துவேசம்’ என்று சில ஏடுகள் விமர்சித்தன. “வாழ்க இந்த விபீஷணர்கள்” என விமர்சனங்களுக்குப் பதிலளித்து உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதினார் கலைஞர். விமர்சனம் வைத்த ஏடுகள் கடந்த காலங்களில், தி.மு.க.வுக்கு எதிராகவும், தமிழ்நாட்டு மக்களின் இடஒதுக்கீட்டு உரிமைகளுக்கு எதிராகவும் கக்கிய நஞ்சை ஆதாரங்களோடு குறிப்பிட்டுத் தமிழின துவேசிகளைத் தோலுரித்தார் கலைஞர். பதில் சொல்ல முடியாமல் வாயடைத்துப்போயினர்.

**...கூட்டம் திரளும்**

# பாசறை படிப்பறை

**கௌதம் ராஜ்** **34**

**“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## தி.மு.க : ‘தமிழ்நாட்டு கம்யூனிஸ்ட் கட்சி!’

சாதிய ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரும் தொழிலாளர்கள்தான் என்று சொன்னவர், தந்தை பெரியார். அதனால்தான் ‘திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம்’ போன்ற அமைப்புகளைத் தொடங்கினார். அந்த வழித்தடத்தில் தொழிற்சங்கங்களை உருவாக்க வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதன் விளைவாக, தனித்தனியாக இயங்கி வந்த கழக சார்பு கொண்ட சங்கங்களையெல்லாம் இணைத்து, ஒரு மத்திய தொழிற்சங்கமாக உருவாக வழிசெய்தவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

மே தினமான 1.5.1970 அன்று, அதுவரை பல்வேறு இடங்களில் தனித்தனியாக இயங்கி வந்த திராவிடத் தொழிலாளர்கள் சங்கங்கள் அனைத்தும் பேரவையில் இணைக்கப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொழிலாளர் அணியாக, ‘தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை’ உருவானது. அதற்குரிய சட்ட விதிகளையும், தனிக் கொடி ஒன்றையும் உருவாக்கித் தந்தார் முத்தமிழறிஞர் கலைஞர்.




அரை நூற்றாண்டைக் கடந்து, ஐந்து லட்சத்திற்கும் அதிகமான உறுப்பினர்களுடனும் நூற்றுக்கும் அதிகமான தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பாகவும் செயல்பட்டு வரும் ‘தொ.மு.ச. பேரவை’-யின் வரலாற்றைத் தனக்கேயுரிய ஆய்வு நேர்த்தியோடு நூலாக்கியுள்ளார் வரலாற்றாசிரியர் க.திருநாவுக்கரசு அவர்கள். கழகத் தலைவர் அவர்களின் முன்னுரையோடும், தொ.மு.ச. பேரவைப் பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி. அவர்களின் அணிந்துரையோடும் வெளியாகி இருக்கும் இந்த நூல், ஒரு வரலாற்றுப் பொக்கிஷம் என்றே சொல்லலாம்.

கழகம் தொடங்கப்பட்ட பிறகு, 1951-ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் மாநில மாநாட்டில் தி.மு.க.வை ‘தமிழ்நாட்டு கம்யூனிஸ்ட் கட்சி’ என்று அறிவித்தார், பேரறிஞர் அண்ணா. தொழிற்சங்க இயக்கத்தை கம்யூனிஸ்ட்டுகளே ஏற்று நடத்த வேண்டும் என்று நம் தலைவர்கள் கருதிய காரணத்தால் அதில் தலையிடாமல் இருந்தனர். பின்னாட்களில் ஏற்பட்ட அரசியல் மாற்றமும் கம்யூனிஸ்ட்டுகளின் ஓரவஞ்சனையும் தி.மு.க.வினரைத் தொழிற்சங்கம் அமைக்க வித்திட்டன. 31.05.1953 அன்று அரக்கோணத்தில் கூட்டப்பட்ட பொதுக்குழுவில் பேரறிஞர் அண்ணா, கழகத்தவர்கள் தொழிற்சங்கங்களை ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றினார். பரந்து விரிந்த வேர்களுடன் விருட்சமாக உருப்பெற்றன, தி.மு.க.வினரின் தொழிற்சங்கங்கள்.

திராவிட பஞ்சாலைத் தொழிலாளர்கள் சங்கம் முதற்கொண்டு, கைத்தறி நெசவு-மின்சார வாரியம்- சர்க்கரை ஆலை- மோட்டார் போக்குவரத்துக்கு- சைக்கிள் ரிக்ஷா-சலவைத் தொழில்-சிகை அலங்காரம்-தூய்மைப் பணி எனப் பல்வேறு தொழிலாளர் முன்னேற்றச் சங்கங்கள் தமிழ்நாடு முழுக்க உருப்பெற்றது. இவர்களிலிருந்து சி.ஆர்.கோலப்பா, மாசிலாமணி, எலமந்தா, பொன்மலை பராங்குசம் போன்றவர்கள் மேலவை உறுப்பினர்களாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் உயர்த்தப்பட்டனர்.

தொ.மு.ச. பேரவையின் தோற்றம்-வளர்ச்சி-சாதனை-சமகால நிலை-கழகத்துடனான தொடர்பு என அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கிய வரலாறாக வெளியாகி இருக்கும் இந்த நூல், தொழிலாளர் பிரச்சினைகள் விவாத மாக்கப்பட்டு வரும் இக்காலக்கட்டத்தில் அனைவரும் வாசிக்க வேண்டிய அவசியமான நூல்.


**...வாசிப்போம்.**

**இந்த நூல், தொழிலாளர் பிரச்சனைகள் விவாத மாக்கப்பட்டு வரும் இக்காலகட்டத்தில் அனை வரும் வாசிக்க வேண்டிய அவசியமான நூல்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**637**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131